RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 259 | செப்டம்பர்.20 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## கரூர் பேருந்து நிலையம் அருகே இபிஎஸ் பொதுக் கூட்டத்துக்கு அனுமதி கோரி வழக்கு

### மீண்டும் மனு அளிக்க உத்தரவு

மதுரை: செப்.20-

கரூர் பேருந்து நிலையம் அருகே எடப்பாடி பழனிசாமி பொதுக்கூட்டத்துக்கு அனுமதி கோரிய வழக்கில் மாவட்ட எஸ்பியிடம் மீண்டும் மனு அளிக்க அதிமுகவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூர் மாவட்ட அதிமுக அவைத்தலைவர் திருவிக, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: கரூர் பேருந்து நிலையம் அருகே கரூர் கோவை சாலையில் செப். 25ம் தேதி மாலை 06.30 மணியளவில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்கும் பொதுக் கூட்டத்திற்கு அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.எம்.அன்புநிதி வாதிடுகையில், மனுதாரர் கோரும் இடத்தில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி வழங்க இயலாது. இதனால் மாற்று இடத்தை பரிந்துரைக்குமாறு மனுதாரருக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு விட்டது என்றார்.

மனுதாரர் தரப்பில், அனுமதி கோரும் இடத்தில் 2022 முதல் பல அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதி, மனுதாரர் தரப்பில் பொதுக்கூட்டதுக்கு அனுமதி கோரும் இடத்தில், ஏற்கெனவே பல்வேறு கட்சிகளுக்கு பொதுக் கூட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டது தொடர்பான ஆவணங்களுடன், கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரை அணுகி மனு அளிக்க வேண்டும். அந்த மனு அடிப்படையில் செப். 22ம் தேதி மாலைக்குள் காவல் கண்காணிப்பாளர் உரிய முடிவெடுக்க வேண்டும். மனு முடிக்கப்படுகிறது என உத்தரவிட்டார்.

## வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் தமிழகத்திலும் அவசியம்: தமிழிசை வலியுறுத்தல்



கோவை: செப்.20-

தமிழகத்திலும் வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் அவசியம் என்று பாஜக மூத்த தலைவரும், முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார். கோவையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பிரதமர் மோடியின் வழிகாட்டுதலின் படி ஜிஎஸ்டியை குறைத்து, பொருளாதார புரட்சியை ஏற்படுத்தி உள்ளார். அதற்கு தமிழக அரசு நன்றி கூறவில்லை. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. தவெக தலைவர் விஜய் எங்கள் கட்சி குறித்து பேசுவதை விட. திமுக மீதான எதிர்ப்பைக் காட்டுவதில் தீவிரமாக இருக்க வேண்டும்.

அமித்ஷாவை சந்தித்துவிட்டு வெளியே வந்தபோது, கர்ச்சீப்பால் முகத்தை துடைத்ததாக பழனிசாமி தெளிவுபடுத்தியுள்ளார். அதை வைத்து அரசியல் செய்வது சரியல்ல. பாஜக எப்போதும் மக்களுக்கு நன்மை மட்டுமே செய்து கொண்டிருக்கிறது. எனவே, மக்கள் பாஜகவுக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும். திமுக கூட்டணி மீது, அவர்களுக்கே நம்பிக்கை இல்லை. அதனால்தான் எதிர்க்கட்சி கூட்டணியை விமர்சிக்கிறார்கள்.

கட்டிட அத்துமீறல்கள்... ஆனைகட்டி வனப்பகுதியில் கட்டிட அத்துமீறல்கள் அதிகம் நடக்கின்றன. இதை எதிர்த்து பாஜக போராடி வருகிறது. வன விலங்குகள் வாழ்விடம் பாதுகாக்கப்பட வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் அல்லது வாக்குச்சீட்டு முறை என எதில் வாக்குப்பதிவு நடத்தினாலும், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக கூட்டணிதான் வெல்லும். தமிழகத்திலும் வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் அவசியமாகும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 'ககன்யான்' திட்ட சோதனை பணிகள் 85 சதவீதம் நிறைவு: இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தகவல்

கோவை: செப்.20-

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் 'ககன்யான்' திட்டத்தின் சோதனை பணிகள் 85 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன (இஸ்ரோ) தலைவர் வி. நாராயணன் கூறினார். கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் 'ககன்யான்' திட்டத்தில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்த திட்டம் 2018ல் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த திட்டம்.

இவ்வாண்டு ஆளில்லா விண்கலத்தில் 'வயோமித்ரா' என்ற இயந்திர மனிதனை அனுப்ப உள்ளோம். டிசம்பர் மாத இறுதியில் இந்நிகழ்வு நடைபெறும். தொடர்ந்து, இரண்டு ஆளில்லா ராக்கெட்களை அனுப்பவும், 2027 மார்ச் மாதம் மனிதர்களை அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது.

'ககன்யான்' திட்டத்தில் 85 சதவீத சோதனைப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மனிதர்களை அனுப்புவதற்கு பல்வேறு கட்ட சோதனைகள் மேற்கொள்ள வேண்டும். ராக்கெட்டில் விபத்து ஏற்பட்டால் மனிதர்களை பாதுகாப்பாக அழைத்து வருவது குறித்தும் ஆய்வு செய்து வருகிறோம். இஸ்ரோ மட்டுமின்றி கடற்படை, வானியல் துறை உள்ளிட்ட பல்வேறு துறையினர் இத்திட்டத்தில் இணைந்து செயல்படுகின்றனர்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் (ஏஐ) விண்வெளித் துறையிலும் வந்துவிட்டது. 'சந்திரயான் 4' நிலாவில் மாதிரிகளை எடுத்து வருவதிலும் 'ஏஐ' தொழில்நுட்பத்தை பயன்படுத்த உள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நாடு முழுவதும் கடந்த 2 மாதத்தில் 808 அரசியல் கட்சிகள் நீக்கம்

### தேர்தல் ஆணையம் நடவடிக்கை




டெல்லி: செப்.20-

நாடு முழுவதும் தொடர்ந்து 6 ஆண்டு தேர்தலில் போட்டியிடாத 474 கட்சிகளை தேர்தல் ஆணையம் நீக்கியது. கடந்த 2019ம் ஆண்டு முதல் தொடர்ந்து 6 ஆண்டுகளுக்குள் ஏதேனும் ஒரு தேர்தலிலாவது போட்டியிட்டு இருக்க வேண்டும் என்ற அத்தியாவசிய நிபந்தனையை நிறைவேற்ற தவறிய பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை அடையாளம் கண்டு பட்டியலில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில் ஆக.9ல் முதற்கட்டமாக நாடு முழுவதும் 334 அரசியல் கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடாத 474 அரசியல் கட்சிகளை நீக்கியது. மொத்தம் சேர்த்து 808 கட்சிகள் நீக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 42 கட்சிகளின் பதிவு ரத்து செய்யப்பட்டுள்ளது. 359 அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டதற்கான வரவு செலவு கணக்குகளையும் தாக்கல் செய்யவில்லை. எந்த ஒரு அரசியல் கட்சியும் தேவையற்ற முறையில் நீக்கம் செய்யப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வாய்ப்பு உள்ளது. மாநில தேர்தல் அதிகாரிகளால் நீக்கம் செய்யப்பட்ட கட்சிகளிடம் இருந்து விளக்கம் பெற வாய்ப்பு தரப்படும்

## பாலஸ்தீன மக்கள் இனப்படுகொலையை தடுத்து நிறுத்த இந்திய அரசு முன்வர வேண்டும் : வைகோ



சென்னை: செப்.20-

பாலஸ்தீன மக்கள் இனப்படுகொலையை தடுத்து நிறுத்த இந்திய அரசு முன்வர வேண்டும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இரண்டு ஆண்டுகளாக காசா மீது இன அழிப்புப் போரை நடத்திக் கொண்டிருக்கும் யூத இனவெறி இஸ்ரேல், ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்களை கொன்றுள்ளது. மறுபுறம், காசாவிற்குள் உணவுப் பொருட்களை அனுமதிக்காமல் பட்டினிப் போரை தொடுத்து வருவதாலும் ஊட்டச் சத்துக் குறைபாட்டாலும், பசியாலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளும் செத்து மடிந்துள்ளனர்.

ஆகஸ்ட் 8ஆம் தேதியன்று காசா நகரத்தை முழுவதுமாக கைப்பற்றும் திட்டத்திற்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்தது. இதற்கு பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. ஆனால், அவற்றையெல்லாம் மீறி காசா மீது தீவிர தாக்குதலை நடத்திய இஸ்ரேலுக்கு அந்நாட்டு மக்களே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஆகஸ்ட் 20ஆம் தேதியன்று காசா நகரம் முழுவதையும் இஸ்ரேலின் கட்டுப்பட்டின் கீழ் கொண்டுவரும் திட்டத்தை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சகம் உறுதிப்படுத்தியது. இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ், காசா நகரை கைப்பற்றும் திட்டத்திற்காக மேலும் 60,000 ரிசர்வ் படைகளை காசாவுக்குள் அனுப்புகின்ற திட்டத்தையும் அங்கீகரித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் 21ஆம் தேதியன்று மக்கள் நெருக்கமாக உள்ள காசா நகரத்தின் சைதூன் மற்றும் ஜபாலியா பகுதிகளில் இஸ்ரேலிய ராணுவம் தரைவழி தாக்குதலை தீவீரப்படுத்தியது. ஏற்கெனவே, காசாவில் இருந்த 19 லட்சம் மக்களை வெளியேற்றிவிட்டு காசாவின் 90 சதவிகிதப் பகுதியை இஸ்ரேல் ராணுவம் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், காசா நகரத்தின் மீது தரைவழித் தாக்குதலை தீவிரப்படுத்துவதன் மூலம் அப்பகுதியில் உள்ள பத்து லட்சம் மக்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றி, காசாவின் அல்மவாசி மற்றும் தெற்குப் பகுதியில் உள்ள முகாம்களுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பி வருகிறது.

அப்பகுதிகளிலிருந்து தெற்கு சூடான் உள்ளிட்ட பிற நாடுகளுக்கு கடத்தவும் இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன. சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஜெர்மனியில் பாசிச ஹிட்லர் யூதர்களை வதை முகாம்களில் அடைத்துப் படுகொலை செய்ததைப் போன்று, தற்போது பாசிஸ்ட் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அரசு காசாவின் பாலஸ்தீன மக்களை முகாம்களில் அடைத்து படுகொலை செய்ய திட்டமிட்டுள்ளது.

அதற்காக காசா நகரத்தின் மீது தாக்குதல் நடத்தி, காசாவை திறந்தவெளி வதைமுகமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

ஹமாஸ் இயக்கத்தை அழிப்பதுதான் தன்னுடைய நோக்கம் என்று அறிவித்துக்கொண்டு காசா மீதான போரைத் தொடங்கிய இஸ்ரேல் அரசு, தற்போது காசாவை முழுமையாக கைப்பற்றுவதுதான் தன்னுடைய நோக்கம் என்று வெளிப்படையாக அறிவித்துள்ளது. "போர் நிறுத்தத்திற்கு தயார்" என்று ஹமாஸ் பலமுறை தெரிவித்துவிட்டப் போதிலும், அதன் நியாயமான கோரிக்கைகளுக்கு உடன்படாமல், நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அரசு போரைத் தொடர்ந்துக் கொண்டிருக்கிறது.

காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. செப்டம்பர் 16ஆம் தேதி தொடங்கிய தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்துகிறது. இஸ்ரேலிய தாக்குதல்களில் காசாவில் உயிரிழந்த பாலஸ்தீனியர்கள் எண்ணிக்கை 65 ஆயிரத்தைக் கடந்துள்ளது. காசா சுகாதார அமைச்சகத்தின் தகவலின்படி, அக்டோபர் 7, 2023 முதல் இதுவரை 65,062 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 165,697 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களில் இஸ்ரேலிய விமானப்படை மற்றும் பீரங்கிப் படை 150க்கும் மேற்பட்ட முறை காசா நகரை தாக்கியுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல்கள், ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் தஞ்சம் அடைந்துள்ள கூடார முகாம்களுக்கு அருகில் உள்ள உயரமான கட்டிடங்களை தரைமட்டமாக்கியுள்ளன.

இலங்கையின் முள்ளிவாய்க்காலில் லட்சக்கணக்கான ஈழத்தமிழ் மக்களை சிங்கள இனவெறி அரசு இனப்படுகொலை செய்ததைப் போல, பாலஸ்தீனத்தின் காசா பகுதியிலுள்ள லட்சக்கணக்கான மக்களை யூத இனவெறி இஸ்ரேல் அரசு நம் கண் முன்னே இனப்படுகொலை செய்து கொண்டிருக்கிறது.

ஈழத் தமிழர்கள் சிங்கள இனவெறி அரசால் லட்சக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்ட பொழுது உலக நாடுகளும், ஐ.நா. மன்றமும் கையறு நிலையில் வேடிக்கை பார்த்தன. அதே போன்று இன்றைக்கு பாலஸ்தீனத்தில் இனப்படுகொலை நடந்து வருகிறது. பாலஸ்தீனத்தின் அப்பாவி மக்கள் படுகொலையை இந்திய அரசு வேடிக்கை பார்க்க கூடாது. காசா மீதானப் போரை நிறுத்துவதற்கு உலக நாடுகளோடு இணைந்து இந்தியா முன் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஜெ.தீபா தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



சென்னை: செப்.20-

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான வருமான வரி வழக்கில், 36 கோடி ரூபாய் செலுத்தக் கூறி வருமான வரித்துறை அனுப்பிய நோட்டீசை எதிர்த்து, அவரது சட்டப்பூர்வ வாரிசான தீபா தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிரான வருமான வரி வழக்கில், 36 கோடி ரூபாயை செலுத்தக் கூறி, அவரது சட்டப்பூர்வ வாரிசாக அறிவிக்கப்பட்டுள்ள தீபாவுக்கு, வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியது. இந்த நோட்டீசை எதிர்த்து, தீபா தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதி சி.சரவணன் முன் விசாரணைக்கு வந்தபோது, ஜெயலலிதாவின் வருமான வரித் தொகை 36 கோடி ரூபாயில் இருந்து 13 கோடி ரூபாயாக குறைத்து, திருத்தியமைக்கப்பட்ட நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக வருமான வரித்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, 36 கோடி ரூபாய் செலுத்தக் கூறி வருமான வரித்துறை அனுப்பிய நோட்டீசை எதிர்த்த இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல எனக் கூறி, தீபாவின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். மேலும், தீபா சட்டப்படி மாற்று நிவாரணம் கோரலாம் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



■ மதுரை மாவட்டம் மேலூர் ஊராட்சி ஒன்றியம் உறங்கான்பட்டி ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சரஸ்வதி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சின்னையா, கார்த்திகேயன்,ஊராட்சி செயலாளர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்றனர்.முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




■ மதுரை வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் மேலக்கால்,திருவேடகம்,தென்கரை,காடுபட்டி ஊராட்சிகளுக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணவேணி, இலட்சுமி காந்தம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சரோஜா,ஊராட்சி செயலாளர்கள் முனியராஜ், சுதாபிரியா, விக்னேஷ், ஒய்யணன் மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி செல்லப்பன் வித்யா மந்திர் சர்வதேச பள்ளியில் தாத்தா பாட்டிகள் தினம் கொண்டாடப்பட்டது. மாணவர்களின் தாத்தா பாட்டிகளுக்காக பல்வேறு போட்டிகள், கலந்துரையாடல்கள் நடைபெற்றன. பங்கேற்ற அனைவருக்கும் பள்ளி நிர்வாகம் நினைவுப்பொருட்கள் வழங்கி கௌரவித்தது.



■ கடலூர் மாவட்டத்தில் 19.9.2025 அன்று இந்து முன்னணியின் நிறுவனத் தலைவர் ராமகோபாலன் ஜி ஜெயந்தி விழாவானது இந்து முன்னணியின் சார்பில் இந்து எழுச்சி நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது இதன் ஒரு பகுதியாக கடலூர் மாவட்டத்தில் இந்து முன்னணியினர் அரசு பொது மருத்துவமனையில் ரத்ததானம் மற்றும் கண் தானம் மற்றும் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் சக்திவேல் மற்றும் கடலூர் நகர பொறுப்பாளர் சிவக்குமார் பாலமுருகன் ரவிச்சந்திரன் விருத்தாசலம் ஒன்றிய பொறுப்பாளர்கள் கமலக்கண்ணன் வாசுதேவன் இந்நிகழ்ச்சியினை மாவட்ட பொறுப்பாளரான வேல்முருகனின் ஏற்பாட்டில் இன்று கடலூர் அரசு பொது மருத்துவமனையில் 20க்கும் மேற்பட்டோர் ரத்ததானம் கண் தானம் செய்தனர்




## முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் தொண்டாற்றிய நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வல அணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டு

தென்காசி, செப்.20-

தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் மாணவ மாணவிகள் மற்றும் போட்டியாளர்களை செம்மைப்படுத்தி போட்டிகள் நன்கு நடைபெற ஒத்துழைப்பு கொடுத்த கல்லூரிகளின் தன்னார்வல நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் பாராட்டி சான்றிதழ் வழங்கி கௌரவித்தார் இது பற்றிய விவரமாவது

தென்காசி மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை போட்டிகள் சிறப்பாக நடக்க தொண்டாற்றிய மாவட்டத்தின் நாட்டு நலப்பணித்திட்ட அணிகள் கௌரவிக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் தென்காசி மாவட்டத்தில் 26. 8. 2025 முதல் 12.9.25 வரை நடைபெற்றது அதற்கான பரிசளிப்பு, மற்றும் பாராட்டு விழா 18.9.25 அன்று மாவட்ட விளையாட்டு அலுவலகம் பாட்டா குறிச்சியில் வைத்து மாவட்ட ஆட்சியர் உயர் கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் முன்னிலை வகித்தார். தென்காசி பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் மருத்துவர் இராணி ஸ்ரீகுமார், தென்காசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பழனி நாடார், உள்ளாட்சி உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக மாவட்ட விளையாட்டு அலுவலர் ராஜேஷ் வரவேற்றார். ஐந்து பிரிவுகளில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் தென்காசி மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்றது. போட்டிகளுக்கு உறுதுணையாக இருந்த கடையநல்லூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆலங்குளம், அரசு கலைக் கல்லூரி சங்கரன்கோவில், அரசுக் கலை கல்லூரி சுரண்டை, புளியங்குடிம. சு. பல்கலை உறுப்புக் கல்லூரி மற்றும் சங்கரன்கோவில், ஜேபி கல்லூரி, (ஆய்க்குடி) யுஎஸ்பி கல்லூரி, கொடிக் குறிச்சி , குற்றாலம்பராசக்தி மகளிர் (தன்னாட்சி) கல்லூரி ஜோசப் கல்லூரி மேட்டூர், பரமகல்யாணி கல்லூரி ஆழ்வார்குறிச்சி, ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி ஆலங்குளம், நல்லமணி யாதவா கல்லூரி கொடிக் குறிச்சி, ஆகிய கல்லூரிகளின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் சிறப்பாக நடந்திட தன்னார்வலர்களாக பணி புரிந்தமைக்கு மாவட்ட ஆட்சியர் உயர்திரு ஏ.கே. கமல் கிஷோர் இ.ஆ.ப. அவர்கள் முதலமைச்சர் கோப்பைக்கான தென்காசி மாவட்ட நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பால் மகேஷ், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. வெளியப்பன் மற்றும் பல்வேறு கல்லூரிகளில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் மாணவ மாணவிகள் ஆகியோர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்து கௌரவித்தார்கள்.

இவ்விழாவில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று பரிசு பெற்ற பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள், மாற்றுத் திறனாளி, பொதுமக்கள், அரசு ஊழியர்கள், மாவட்ட விளையாட்டு பயிற்சியாளர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குனர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வரும் செப்டம்பர் 28ஆம் தேதி ஸ்ரீ ஐயங்கிவர் செஸ் அகாடமி நடத்தும் 2வது மாநில அளவிலான செஸ் போட்டியில் பங்கேற்க வீரா வீராங்கனைக்கு அழைப்பு



தாம்பரம், செப்.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பெருங்களத்தூரில் வரும் செப்டம்பர் 28ஆம் தேதி நடக்க உள்ள 2வது மாநில அளவிலான செஸ் போட்டியில் பங்கேற்க அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ ஹயக்ரீவர் செஸ் அகடமி சார்பில் 2வது மாநில அளவிலான செஸ் போட்டி பெருங்களத்தூரில் உள்ள ஜி.கே.எம் கல்லூரியில் வரும் 28ஆம் தேதி நடக்கிறது இதில் 8, 10, 13 மற்றும் 25 பாய்ஸ் மற்றும் 8, 10, 25, 13 பெண்கள் உட்பட்ட பிரிவுகளில் தனித்தனியாக போட்டிகள் நடைபெறுகின்றன போட்டிகள் சுவிஸ் முறையில் பிடே விதிப்படி நடைபெறுகின்றன அனைத்து பிரிவுகளில் முதல் பரிசு செஸ் கிளாக் அதனுடன் பதக்கங்களும் வழங்கப்படுகிறது அனைத்து பிரிவுகளில் முதல் 20 இடங்களில் பிடிப்போருக்கு கோப்பைகள் அடுத்து முதல் 10 இடங்களில் பிடிப்பதற்கு பதக்கங்களை வழங்கப்படுகிறது இதில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் பதிவு செய்யலாம் மேலும் விவரங்களுக்கு ஸ்ரீ ஐயங்கிவர் செஸ் அகாடமியின் நிறுவனர் கோகிலா 7200101544, 7305935093, மற்றும் 8778639020 என்ற இந்த மொபைல் போன் எண்களில் தொடர்பு கொள்ளலாம்

## தவெக தலைவர் விஜய் பெருமை பேசக் கூடாது: சீமான் கருத்து

சென்னை, செப்.20-

'அரசியலுக்கு வந்தால் சேவை செய்யுங்கள், பெருமை பேசாதீர்கள்' என விஜய்யை, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மக்களுக்கு சேவை செய்ய வந்தால், சேவை செய்ய வந்ததாக இருக்கவேண்டும். தவெக தலைவர் விஜய் சினிமாவில் உயர்ந்த நடிகராக உள்ளார். அவருக்கென ஒரு வியாபாரம் இருக்கிறது.

ஆனால் மக்களுக்காக என்னுடைய உச்சத்தை, என்னுடைய வருவாயை விட்டு விட்டு வந்தேன் என்று அவர் அடிக்கடி கூறுவதை கேட்டால், யார் அவரை சினிமாவை விட்டுவிட்டு வரச்சொன்னது? அவ்வாறு பெருமை பேசக் கூடாது. அப்படி சொல்வது ஒரு தலைவனுக்கு அழகல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

## காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் தேசிய மாணவர் படை மாணவருக்குப் பாராட்டு

காரைக்குடி, செப்.20-

செப்டம்பர் 1ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை டெல்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படையின் அகில இந்திய தால்சைனிக் முகாமில் (AITSC) அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் சார்பாக, இயற்பியல் துறையில் இளநிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவன் சேதுபதி கலந்து கொண்டார். அம்மாணவருக்கு கல்லூரியின் சார்பாக இன்று பாராட்டு விழா நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தியின் வழிகாட்டுதலில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ்நாடு 9 பட்டாலியன் குரூப் கமாண்டர் லெப்டினன்ட்



கர்னல் சிபி தாமஸ் கலந்து கொண்டு அம்மாணவருக்கு நினைவுப் பரிசினை வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். விழாவில் இயற்பியல் துறைத்தலைவர் பேராசிரியை கவிதா மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை தேசிய மாணவர் படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் ஏற்பாடு செய்திருந்தார்.



## சத்துவாச்சாரி வேலூர் மாநகராட்சி, மண்டலம் 25, 26 ஆகிய வார்டில், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், செப்.20-

வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி, தஞ்சம்மாள் (தனியார்) திருமண மண்டபத்தில், வேலூர் சத்துவாச்சாரி மாநகராட்சி, மண்டலம் 25, 26 ஆகிய வார்டில், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், இரண்டாவது மண்டல குழு தலைவர் வீனஸ் ஆர். நரேந்திரன், 25 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கணேஷ் சங்கர், 26 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் எம். சேகர் ஆகியோர் முன்னிலையில் தொடங்கியது. இம்முகாமில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன், மாநக ராட்சி மேயர் சுஜாதா ஆனந்த குமார், ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றனர். மேலும், இம்முகாமில் வேலூர் மாநகராட்சி ஆணையாளர் இலட்சுமணன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், வேலூர் வட்டாட்சியர் வடிவேலு, ஜெகதீசன், சத்துவாச்சாரி மாநகராட்சி மண்டல உதவி ஆணையர் சதீஷ்குமார், உதவி பொறியாளர் ஜெயக்குமார், சுகாதார அலுவலர் சிவகுமார், 25 வார்டு வட்ட செயலாளர் சண்முகவேல், 26வார்டு வட்ட செயலாளர் ஜெ.குணசேகரன், பகுதி செயலாளர் பாலமுரளி கிருஷ்ணா மற்றும் பலர் கலந்து கொண்டு முகாமை சிறப்புத்தனர். இதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வு துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத்துறை, மின்சாரத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சிறு குரு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, வேளாண்மை துறை உள்ளிட்ட 13, துறை அலுவலர்கள் பங்கேற்று 25, 26 வது வார்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொண்டனர். வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப, கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த குமார், ஆகியோர் கலந்து கொண்டு தகுதியுள்ள மனுதாரர்களுக்கு தீர்வு காணும் விதத்தில் கோரிக்கை மனு மீதான ஆவண ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினர்,




## முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு நெடுமதுரை ஊராட்சியில்,1,000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய கிருத்திகா தங்கபாண்டியன்

மதுரை, செப்.20-

முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு, மதுரை தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் 1,000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தெற்கு ஒன்றியத்திலுள்ள நெடுமதுரை ஊராட்சியில் நடைபெற்றது. இந்த விழா மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் தலைமையிலும், திருப்பரங்குன்றம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் வேட்டையன் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில், மதுரை தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளர் கிருத்திகா தங்கபாண்டி, 1,000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தொடர்ந்து, திமுக அரசின் சாதனைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்து கிருத்திகா தங்கபாண்டி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில், திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சிவகாசிவனராஜா, திருமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி, நெடுமதுரை பகுதி கிளை செயலாளர்கள் பாலமுருகன், மொக்கை, பன்னீர், மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் காளிதாஸ், தொண்டர் மகளிர் அணி அமைப்பாளர் பிரமிளா, மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட திமுக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





# தேவகோட்டை ஆனந்தா கல்லூரி, பைத்தான் புரோகிராமிங்கில் வெற்றிக்கான திறவுகோல் ஒரு நாள் தேசியக் கருத்தரங்கம்

தேவகோட்டை, செப்.20-

சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் கணினி பயன்பாட்டு வியல் துறை முதுகலை கணினி அறிவியல் துறை, கணினி ஆய்வு துறை இணைந்து பைத்தான் புரோகிராமிங்கில் வெற்றிக்கான திறவுகோல் என்ற தலைப்பில் ஒரு தேசியக் கருத்தரங்கைகல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு துணை முதல்வர் முனைவர் விக்டர் பென வெண்ட்ராஜ் வரவேற்புரை வழங்கினார். இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக திருச்சி ஏஸ்கொயர் தகவல் மையத்தின் உரிமையாளரும் நிர்வாக இயக்குநருமான முனைவர் சரவணராமன் பேசுகையில், பைதான் நிரலாக்கத்தில் உள்ள மகத்தான வாய்ப்புகளை ஆராய மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் தொழில்துறை நிபுணர்களுக்கான அறிவுசார் தளமாக இந்த கருத்தரங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது என்று எடுத்துரைத்தார். இறுதியாக கணினி பயன்பாட்டு வியல் துறை உதவிப் பேராசிரியர் ஜான் கென்னடி நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் பல்வேறு கல்லூரியிலிருந்து 450 இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி பயிலும் மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினை மூன்று துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.





■ வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, நேற்று குறள் திரையரங்கம் அருகே உள்ள நிக்கல்சன் கால்வாயில் ஏற்பட்டுள்ள அடைப்புகள் அகற்றுவது குறித்து மாநகராட்சி அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி மேயர் சுஜாதா, மாநகராட்சி செயற்பொறியாளர் அரசு, மாமன்ற உறுப்பினர் காஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, வட்டாட்சியர் வடிவேல் உட்பட பலர் உடனிருந்தனர்.



# பழனி காவல் நிலையத்தில் இடப்பிரச்சினை சம்பந்தமாக மூதாட்டி தீக்குளிக்க முயற்சி

திண்டுக்கல், செப்.20-

திண்டுக்கல் மாவட்டம் பழனி 24வது வார்டு ராமர் தெருவில் வசித்து வருபவர்கள் தண்டபாணி குடும்பத்தினர். இவர்கள் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக அங்கு வசித்து வருவதாக கூறப்படுகிறது.

முன்னதாக இவர்கள் வசித்து வரும் வீட்டிற்கு மின்சார கட்டணம் வீட்டு வரி போன்றவை செலுத்தி வரும் நிலையில் பட்டா வேண்டி மனு செய்துள்ளனர்.

இதற்கிடையே இவர்கள் வீட்டின் அருகே செந்தில் ,சுமதி என்பவர்கள் வீடு கட்டுவதற்காக போர்வெல் அமைத்துள்ளனர். இந்நிலையில் அந்த அதிர்வின் காரணமாக தண்டபாணியின் வீட்டின் சுவர் விரிசல் விழுந்துள்ளது.

இதனால் இவர்கள் வீட்டை சரி செய்ய முயற்சி செய்துள்ளனர். அப்பொழுது செந்தில் தரப்பினர் இவர்களை வீட்டை சரி செய்ய விடாமல் தடுத்துள்ளனர் .மேலும் அடியாட்களை வைத்து வீட்டை காலி செய்து இங்கிருந்து சென்று விட வேண்டும் என மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

தொடர்ந்து தண்டபாணி குடும்பத்தினர் அப்பகுதி கவுன்சிலர் சாகுல் ஹமீதிடம் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர் செந்தில் குடும்பத்தினருக்கு உதவும் வகையில் நடந்துள்ளார் என தண்டபாணி தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

முன்னதாக இந்த வீட்டின் பிரச்சினை மற்றும் செந்தில் குடும்பத்தினர் மிரட்டுவது சம்பந்தமாக பலமுறை காவல்துறையில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கூறி ,இன்று தண்டபாணியின் தாயார் பஞ்சவர்ணம் பழனி துணை காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தார்.

இதனைத் தொடர்ந்து அங்கு இருந்த காவலர்கள் அவரை தடுத்து மண்ணெண்ணெய் கேனை பறித்தனர்.

மேலும் பழனி துணை காவல் கண்காணிப்பாளர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாகவும் அவர்களிடம் உறுதி அளித்தார்.

முன்னதாக பழனி நகர காவல் நிலையத்தில் மூதாட்டி தீக்குளிக்க முயன்ற சம்பவம் பகுதியில் பெயரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தீபாவளி 2025ம் ஆண்டிற்கு ரூ.5 கோடி விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது கோ -ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்புத்தள்ளுபடி விற்பனையினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தகவல்

கன்னியாகுமரி, செப்.20-

கன்னியாகுமரி மாவட்ட கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில் நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம் அருகிலுள்ள காமராஜர் வணிகவளாகத்தில் இயங்கி வரும் கோ ஆப் டெக்ஸ் அங்காடியில் நடைபெறும் தீபாவளி தள்ளுபடி விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஆர்.காந்தி, அவர்கள் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி, முதல் விற்பனையினை துவக்கி வைத்து தெரிவிக்கையில்:

கோ ஆப்டெக்ஸ் தமிழ்நாட்டிற்குட்பட்ட கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் இரகங்களை கொள்முதல் செய்து இந்தியா முழுவதும் உள்ள கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.



காலத்திற்கேற்ற வகையில் புதிய உத்திகளைக்கையாண்டு பல புதிய வடிவமைப்புகளில் கோஆப்டெக்ஸ் நிறுவனம் தனது வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு செப்டம்பர் 15ம் தேதி முதல் ஜனவரி 31ம் தேதி வரை தமிழ்நாடு அரசு வழங்கும் 30% சிறப்புத்தள்ளுபடி விற்பனை திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த தீபாவளி விற்பனைக்காக புதிய வடிவமைப்புடன் கூடிய கோவை மென்பட்டு புடவைகள், காஞ்சிபுரம், ஆரணி தஞ்சை போன்ற பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுபுடவைகள், திருப்புவனம் பட்டு சேலைகள், பல்வேறு பகுதிகளில் நெசவாளர்களின் கைவண்ணத்தில் உருவான பருத்தி சேலைகள் போர்வைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், வேட்டிகள், லுங்கிகள், துண்டு இரகங்கள், பருத்தி சட்டைகள் திரைச்சீலைகள், நைட்டீஸ், மாப்பிள்ளைசெட் மற்றும் ஏற்றுமதி இரகங்கள் ஏராளமாகத் தருவிக்கப் பட்டுள்ளன.

திருநெல்வேலி மண்டலத்தில் 13 விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது ரூ.10.00 கோடிக்கு விற்பனை நடைபெற்றது. இந்த வருடம் ரூ.12 கோடிக்கு விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நான்கு விற்பனை நிலையங்களுக்கு ரூ.5 கோடிக்கு விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் கோ ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்பு திட்டம் என்ற சேமிப்பு திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இதன்படி 11 மாத சந்தா தொகை வாடிக்கையாளர்கள் செலுத்தினால் 12வது சந்தா தொகையை கோ ஆப்டெக்ஸ் செலுத்தி மொத்த முதிர்வு தொகைக்கு தேவைப்படும் துணிகளை 30% அரசு தள்ளுபடியுடன் வழங்கி வருகிறது. எனவே, பொதுமக்கள், அரசு அலுவலர்கள், சுற்றுலா பயணிகள் உள்ளிட்டோர் கைத்தறி நெசவாளர்கள் வாழ்வாதாரம் சிறக்க கைத்தறி துணிகளை வாங்கி ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சிதலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சிதலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம். ஆர்.காந்தி, அவர்கள் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ் அவர்கள் முன்னிலையில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை உதவி உறைவிட மருத்துவர் மரு.விஜயலெட்சுமி அவர்களுக்கும், அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்ஹேமா அவர்களுக்கு முதல் விற்பனையை வழங்கி துவக்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் திருமதி.மேரி பிரின்சி லதா, கோ ஆப்டெக்ஸ் திருநெல்வேலி மண்டல மேலாளர் திரு.நா. இராஜேஷ்குமார், கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குநர் திருமதி. ஜெயசுதா, ஆசாரிப்பள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உறைவிட உதவி மருத்துவர் மரு.விஜயலெட்சுமி, மண்டல தலைவர்கள் திருமதி.அகஸ்டினா கோகிலா வாணி, வழக்கறிஞர் திரு.சதாசிவம், கோ ஆப்டெக்ஸ் அலுவலர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட புதுநகர் இரண்டாவது வார்டு 5 மற்றும் 6 வது தெருவில் சாக்கடை வசதி இல்லாததால் மலேரியா, டெங்கு, டைபாய்டு போன்ற தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இப்பகுதிகளில் சாக்கடை வசதி ஏற்படுத்தி தரக்கோரி உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பள்ளி மாணவர் மகிழன்செல்வம் பள்ளி சீருடை உடன் வந்து மனு கொடுத்துள்ளார். விரைந்து நடவடிக்கை எடுத்து சாக்கடை வசதி ஏற்படுத்தி தர கோரி மாணவன் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.



# கோவையில்ஸ்ரீ விஸ்வ பிரம்ம ஜெயந்தி விழா

கோவை, செப்.20-

கோவை வாழ் விஸ்வகர்மா சமுதாய மக்கள் ஸ்ரீ முத்து விநாயகர் காமாட்சி அம்மன் தேவஸ்தானம் இணைந்து நடத்திய ஸ்ரீ விஸ்வ பிரம்ம ஜெயந்தி விழா கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றது. இதில் ஸ்ரீ காயத்ரி தேவிக்கு சிறப்பு அலங்கார பூஜைகள் கணபதி ஹோமம் அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து விஸ்வ பிரம்ம ஜெயந்தி ஊர்வலம் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் மற்றும் விஸ்வகர்ம சமுதாய மக்கள் கலந்துகொண்டனர்...

ஒவ்வொரு ஆண்டும் ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்களுக்கு தமிழ்நாடு விஸ்வாஸ் விஸ்வகர்மா அப்ரைசர்ஸ் யூனியன் மற்றும் விஸ்வாஸ் விஸ்வகர்மா அப்ரைசர்ஸ் அசோசியேசன் கோவை

ஆகியவை இணைந்து குளிர்பானங்கள் மற்றும் அன்ன பிரசாதம் வழங்கி நிகழ்ச்சி வருகின்றன. அதனைத்தொடர்ந்து இந்த ஆண்டும் ஊர்வலத்தில் கலந்து கொண்ட சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொங்கல், இனிப்புகள், குளிர்பானங்கள்,மற்றும் தண்ணீர் வழங்கும் நிகழ்ச்சி மாநில ஒருங்கிணைப்பாளர் சி.கணேசன் தலைமையில் நடைபெற்றது...

இந்நிகழ்ச்சிக்கு A.கண்ணன் மாநிலத் துணைத் தலைவர் N.மாரி குமார் மாநில பொதுச் செயலாளர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக K.p.சண்முகவேல் மாநில தலைவர் G.சச்சிதானந்தன் மாநிலச் செயலாளர் K.நாகராஜ் மாநில பொருளாளர் S.P. பாலகுரு மாநில இணைத் தலைவர் J. சண்முகம் மேற்கு மண்டலத் தலைவர் மற்றும் வங்கி நகை மதிப்பீட்டாளர்கள் செந்தில்குமார் ராஜேஷ் ஜெயராமன் சக்திவேல் காளிராஜ் சரவணன் பிரதீப் குமார் பாலமுருகன் டை மேக்கர் ராஜன்டை மேக்கர் ஆனந்தன் டை மேக்கர் வினோத்குமார் கிரிராஜ், மற்றும் யூனியன் நிர்வாகிகள் பொதுமக்கள் பக்தர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





# தாம்பரம் மாநகராட்சி 48வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகத்தை வழங்கினார்

தாம்பரம், செப்.20-

செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரம் தனியார் பள்ளியில் தாம்பரம் மாநகராட்சி 48வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமில் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, 5வது மண்டல குழுத் தலைவர் எஸ்.இந்திரன், துனை ஆணையாளர் ராஜலட்சுமி, மாமன்ற உறுப்பினர் சசிகலா கார்த்திக் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகத்தை வழங்கினர். இதனை தொடர்ந்து முகாமை ஆய்வு செய்து விண்ணப்பித்தவர்களுக்கு பிறப்பு, இறப்பு சான்றிதழ் மற்றும் சொத்துவரி, மின்சார பெயர் மாற்றம் சான்றிதழ்களை வழங்கியும் மகளிர் உரிமைக்கான 1000 ரூபாய் விண்ணபித்தவர்களுக்கு ஆவணங்கள் சரிபார்க்கபட்டு 45 நாட்களுக்குள் வழங்கபடும் என தெரிவித்தனர். முகாமில் வருவாய் துறை, சுகாதாரதுறை, மருத்துவதுறை, இசேவை மையம் போன்ற பல்வேறு துறைகள் அமைக்கபட்டு மக்கள் பயன் பெற்றனர். இதில் வட்ட செயலாளர் முனுசாமி, தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்திக், மாநகர அணியின் நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மண்ணிவாக்கம் ஊராட்சியில் புதிய நியாய விலை கடை மற்றும் காரிய மண்டபம் கட்டிடம் திறப்பு விழா

செங்கல்பட்டு, செப்.20-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மூலம் ரூ12.70 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் ஊராட்சி மன்ற தலைவர் கெஜலட்சுமி சண்முகம் தலைமை தாங்கினார், ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன், துணைத் தலைவர் சுமதி லோகநாதன், ஒன்றிய கவுன்சிலர் சோமாசுந்தரம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாஸ்கரன், மீனாட்சி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி செயலர் ராமபக்தன் அனைவரையும் வரவேற்றனர். சிறப்பு அழைப்பாளராக ஒன்றிய குழு பெருந்தலைவர்



உதயா கருணாகரன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொதுமக்களுக்கு அரிசி, சர்க்கரை, பருப்பு, கோதுமை, பாமாயில், ஆகியவற்றை வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து மண்ணிவாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட சண்முகா நகர் பத்தாவது தெரு பகுதியில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ 9,லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட காரிய மண்டபம் கட்டிடத்தினை ஒன்றிய குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன் திறந்து வைத்தார். இதில் ஒன்றிய துணைச் செயலாளர் பொன்னுசாமி, காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.கார்த்திக், மற்றும் வார்டு கவுன்சிலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் சர்வதேச கருத்தரங்க நிகழ்ச்சி

வேலூர், செப்.20-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் புகழ் பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் சர்வதேச கருத்தரங்கம் விஐடி பல்கலைக்கழக வேந்தர் கோ விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மியான்மர் கல்வி துணை அமைச்சர் சாமியஹன்ட் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து இதன் நினைவாக மரக்கன்றுகளை நடவு செய்து நீரூற்றினர். இந்நிகழ்வின்போது விஐடி துணை தலைவர்கள் சங்கர் விஸ்வநாதன், சேகர் விஸ்வநாதன் மற்றும் விழா குழு நிர்வாகிகள், விஜடி பல்கலைக்கழக பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## சிவகங்கை மாவட்ட திமுக சுற்றுசூழல் அணி தேவதாஸ், மாவட்ட பிரதிநிதி ஈஷ்வரன் இல்ல மணவிழா

### அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் எம்எல்ஏ தமிழரசி ரவிக்குமார் பங்கேற்பு

சிவகங்கை, செப்.20-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் மாவட்ட திமுக சுற்றுசூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஒன்றிய முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் தொழிலதிபர் தேவதாஸ் மகன் செண்பகராஜ் க்கும் மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய முன்னாள் கவுன்சிலர், சங்கங்குளம் ஈஷவரன் மகள் தர்ஷனாவிற்கும் திருப்புவனத்தில் திருமணம் நடைபெற்றது.

மாவட்ட திமுக துணைச் செயலாளர் பேரூராட்சி தலைவர் த. சேங்கைமாறன் முன்னிலையில் நடைபெற்ற இந்த மணவிழாவினை தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர், சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு நடத்தி வைத்தார்...

சேங்கைமாறன் வரவேற்புரையாற்றிட நடைபெற்ற இந்த மணவிழாவில் மேனாள் அமைச்சர் முகவை தென்னவன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஒன்றியக்கழக செயலாளர் சுப.மதியரசன், சேர்மன் எஸ். மாரியப்பன் கென்னடி, மேற்கு ஒன்றியக்கழக செயலாளர் வசந்தி சேங்கைமாறன் , திருமலை முத்துராமலிங்கம், இராஜாமணி, வழக்கறிஞர் அண்ணாத்துரை, முத்துச்சாமி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ். ஏ. வல்லபாய் , மாவட்ட துணை அமைப்பாளர் மணலூர் கேஎம். பொற்கோ, அறிவுக்கரசு , கலை இலக்கிய பேரவை திருநாவுக்கரசு, அண்ணாமலை, திருமலை குமணன், இளைஞரணி கண்ணன், சென்னை சிவா எண்டர்பிரைஸஸ் சிவக்குமார், தேளி கோபால், மடப்புரம் , ஜெயக்கொடி மடப்புரம் மகேந்திரன், அரசு ஒப்பந்ததாரர் மணிமுத்து , தொண்டரணி ராஜா மீனாட்சி சுந்தரம், சக்தி முருகன் , புவணேஷ்வரன், கலுங்குபட்டி முருகன், காளிதாஸ் , பாண்டியார் கிருஷ்ணன், திருப்பதி, விளையாட்டு மேம்பாட்டு ஆணி செந்தில்குமார், தட்டாங்குளம் துரை , உள்ளிட்ட திமுக மற்றும் தொழில் சார்ந்த பிரமுகர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மணமக்கள் வீட்டாரான மாவட்ட திமுக சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் தேவதாஸ், மாவட்ட பிரதிநிதி சங்கங்குளம் ஈஷ்வரன் வீட்டார் சிறப்பாக செய்திருந்தனர்...

## திருப்பூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் 15.07.2025 முதல் 15.11.2025 வரை நகரம் மற்றும் ஊரக பஞ்சாயத் வாரியாக முகாம்கள் நடைபெறுகிறது மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

திருப்பூர், செப்.20-

திருப்பூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் 15.07.2025 முதல் 15.11.2025 வரை நகரம் மற்றும் ஊரக பஞ்சாயத் வாரியாக முகாம்கள் நடைபெறுகிறது. தற்பொழுது நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் பங்கேற்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்கில் உள்ள மாவட்ட தொழில் மைய அலுவலர்களை அணுகி இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கலாம். நடைபெறும் அனைத்து முகாம்களிலும் தொழில் செய்ய விருப்பம் உள்ள நபர்கள் கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் தொழில் துவங்கி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

• புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

• உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் மட்டும்

• முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருத்தல் வேண்டும்

• வயது வரம்பு பொது பிரிவு 21 முதல் 45 வரை சிறப்பு பிரிவு மற்றும் மகளிருக்கு 21 முதல் 55 வயது வரை

• கல்வி தகுதி குறைந்தபட்சம் மேல்நிலை பள்ளிகளில் தேர்ச்சி / பட்டய படிப்பு / ஐடிஐ / தொழில்பயிற்சி / பட்டப்படிப்பு

• தேவையான ஆவணங்கள் : ஆதார் அட்டை, குடும்ப அட்டை, மாற்றுச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், திட்ட அறிக்கை மற்றும் விலைப் புள்ளி.

• கலைஞர் கைவினைத் திட்டம் (KKT)

• ஆதார் அட்டை, குடும்ப அட்டை, விலைப் புள்ளி, வங்கி புத்தகம்

• குறைந்தபட்சம் 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்

• 5 ஆண்டுகள் முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்

வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

• வர்த்தகம் சார்ந்த தொழில்கள் மட்டும்

• வயது வரம்பு பொது பிரிவு 18 முதல் 45 வரை சிறப்பு பிரிவு மற்றும் மகளிருக்கு 18 முதல் 55 வயது வரை

• கல்வித் தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சி

• ஆண்டு வருமான 8 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்

• திட்ட மதிப்பீடு அதிக பட்சம் ரூ.15 இலட்சம்

• தேவையான ஆவணங்கள் : ஆதார் அட்டை, குடும்ப அட்டை, மாற்றுச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் விலைப் புள்ளி.

• அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS)

• ஆதிதிராவிடர் / பழங்குடியின தொழில் முனைவோர்

• வயது வரம்பு 18 முதல் 55 வயது வரை

• கல்வித் தகுதி தேவையில்லை

• ஆண்டு வருமானத்தில் உச்ச வரம்பு இல்லை

• திட்ட மதிப்பீட உச்ச வரம்பு இல்லை

• தேவையான ஆவணங்கள் : சாதிச்சான்றிதழ், பள்ளி மாற்றுச் சான்றிதழ், ஆதார் அட்டை, திட்ட அறிக்கை , இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கான விலைப் புள்ளி, வாடகை ஒப்பந்த பத்திரம், கட்டிட மதிப்பீடு திட்ட மதிப்பீட்டில் நிலத்தின் ஒப்பந்த நகல்.

தகுதியான பொது மக்கள் இத்திட்டத்தின் மூலம் புதிய தொழில் துவங்கவும், தொழிலை மேம்படுத்தவும் பயன் படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே அழைப்பு விடுத்துள்ளார்கள்.

மேலும் விவரங்கள் பெறவும், கூடுதல் வழிகாட்டுதலுக்கும் 0421 2475007, 89255 34024, 8925534025 ஆகிய அலுவலக எண்களை தொடர்பு கொள்ளலாம்.



## உலக அளவில் புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி ஸ்ரீ சக்தி அம்மா சார்பில் உலகம் போற்றும் உலகத் தலைவர் பாரத பிரதமருக்கு பிறந்தநாள் வாழ்த்து

வேலூர், செப்.20-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் அடுத்த திருமலைக்கோடி, உலக அளவில் புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் ஸ்ரீ சக்தி அம்மா சார்பில், உலகம் போற்றும், உலகத் தலைவர், பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு 75ம் பிறந்தநாள் வாழ்த்தாக, இந்தியாவை சிறப்பான முறையில் ஆட்சி செய்து, உலக அளவில் வளர்ச்சிப் பாதையில் வேகமாக கொண்டு செல்லும் பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கு, ஸ்ரீபுரம் தங்க கோயில் ஸ்ரீ நாராயணி அருளை பெற்று ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளும் பெற்று நீடூடி வாழ வாழ்த்து தெரிவித்தனர்.



## மின்தடை அறிவிப்பு

சிவகங்கை, செப்.20-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகர் மற்றும் காமராஜர் காலனி, பையூர், காஞ்சிரங்கால், வந்தவாசி கூத்தாண்டன், வாணியங்குடி, கீழக்கண்டனி சுந்தர் நடப்பு, சோழபுரம், சூரக்குளம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதியில் இன்று (செப் 20) காலை 10மணி முதல் மால 5 மணி வரை மின்விநியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர் முருகையன் தெரிவித்துள்ளார்



## வேலூர் பி.டி.ஒ. அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் சாதாரண கூட்டம்

வேலூர், செப்.20-

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அண்ணா சாலை, வேலூர் பி.டி.ஒ. அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் சாதாரண கூட்டம், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன் தலைமையிலும், வட்டார வளர்ச்சி அலுவலர் ரமேஷ் வின்சென்ட் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் வேலூர் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், வட்டார வளர்ச்சி திட்டப் பணிகள் அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 24 வது வார்டில் ரூ.20.90 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா பேருந்து நிலைய தபால் நிலையம் அருகே தரையில் டைல்ஸ் அமைக்கும் பணி மற்றும் நாகராஜா கோயில் திடலில் நடைபாதை அமைக்கும் பணிகளை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். உடன் துணைமேயர் மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர் அகஸ்டினா. கோகிலவாணி மாமன்ற உறுப்பினர் ரோசிட்டா பகுதி செயலாளர் சேக்மீரான் செயற்குழு உறுப்பினர் .சதாசிவம், வட்ட செயலாளர் .பாலா தி மு க நிர்வாகிகள் பன்னீர் செல்வம், ராஜேஷ் ரத்தினமணி .ஆறுமுகம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், தி மு க நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## மகா துர்க்கை அம்மன் கோவிலின் முதலாம் ஆண்டு விழா

கோவை, செப்.20-

கோவை மாவட்டம் மதுக்கரை வட்டம், வழுக்குப்பாறை அடுத்துள்ள மீனாட்சிபுரம் கிராமத்தில் எழுந்தருளி அருளும் ஆசியும் வழங்கி வரும் அருள்மிகு மகா துர்க் கை அம்மன், அருள்மிகு விநாயகர், அருள்மிகு முருகன் திருக்கோவிலில் முதலாம் ஆண்டு விழாவும், பேரூர் ஆதினம் திருப்பெருந்திரு ராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழாவும், அபிராமி அந்தாதி எனும் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. இப்முப்பெரும் விழாவானது அருள்மிகு மகா துர்க்கை தர்மஸ்தல ஆசிரமத்தின் நிறுவனர் தவத்திரு மெய்கண்ட ஆதீனம் தலைமையில், வேள்விபூஜை, திருவிளக்கு பூஜை, சிறப்பு அபிஷேக ஆராதனை, உள்ளிட்டவை வேத மந்திரங்களுடன் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பேரூர் ஆதீனம் தவத்திரு மருதாசல அடிகளார், கௌமார மடாலயம் சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், ஓதிமலை சிவநேச அடிகளார், பச்சாபாளையம் சிவநந்தி அடிகளார் ஆகியோரின் அருள் ஆசியுடன் நடை பெற்ற விழாவில், சிறப்பு விருந்தினர்களாக இந்து மக்கள் கட்சி தமிழகம் நிறுவன தலைவர் அர்ஜுன் சம்பத், மாநில துணைத்தலைவர் மகரிஷி மந்திராச்சலம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏ செ.தாமோதரன், கலைவாணி கல்வியியல் கல்லூரி, கலைவாணி மாடல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கலைவாணி போலீஸ் அகாடமி ஆகியவற்றின் நிறுவனத் தலைவர் உட்பட மேலும் பலர் கலந்து கொண்டு அருள்மிகு மகா துர்க்கை அம்மன் முதலாம் ஆண்டு விழாவை சிறப்பித்தனர். அபிராமி அந்தாதி எனும் முப்பெரும் விழா மலரை கலைவாணி கல்வியியல் கல்லூரி நிறுவனத் தலைவர் வெளியிட கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் செ.தாமோதரன் இந்து மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் அர்ஜுன் சம்பத் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மேலும் முதலாம் ஆண்டு விழாவில் ஏராளமான பக்த கோடிகள் கலந்து கொண்டு துர்க்கை அம்மனை தரிசித்து ஆசி பெற்று சென்றனர்.

## உழவர் பயிற்சி நிலையம் மூலமாக விவசாயிகளுக்கு கிராம அளவிலான பயிற்சி நடத்தப்பட்டது

சிவகங்கை, செப்.20-

சிவகங்கை மாவட்டம், வேளாண்மைத் துறை உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 202526 ம் ஆண்டு கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை இணை இயக்குநர் , சிவகங்கை மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்); , சிவகங்கை அறிவுரையின் பேரில் 17.09.2025 அன்று காளையார்கோவில் வட்டாரம் , ஆண்டுச்சிவூரணி கிராமத்தில் பயிற்சி நடைபெற்றது.



இந்த பயிற்சியில் திரு.கா.வீரையா, வேளாண்மை அலுவலர் (உ.ப.நி) கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மைகள் , விவசாயிகள் விதைகள் (வல்லுநர் விதை, அடிப்படை விதை , சான்று விதை) வாங்கும்பொழுது கவனிக்க வேண்டிய முறைகள் பற்றியும் , இயற்கை உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண் வளத்தைப்பெருக்கி இடுபொருகளுக்கு ஆகும் செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்றும், கோயம்பத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2025 வெளியிட்ட புதிய பயிர்கள் இரகங்கள் பற்றியும் , வேளாண்மையில் நன்மை செய்யும் பூச்சிகள் (குளவி, நாவாய் பூச்சி, சிலந்தி, தரை வண்டு, பச்சை கண்ணாடி இறக்கை பூச்சி மற்றும் ரெட்விட் வண்டு ) கண்டறியும் முறைகள் மற்றும் அதனால் ஏற்படும் பயன்கள் பற்றியும் மற்றும் தாவர பூச்சிக் கொல்லிகள் (வேப்ப எண்ணெய் 3 சதவீதம் , வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவீதம், வேப்பம்பிண்ணாக்கு(100 கிலோ ஏக்கருக்கு)ஃ பூச்சி விரட்டிகள் தாயரிக்கும் முறைகள் பற்றியும் (ஐந்தி லைக்கரைசல், மூலிகைபூச்சி விரட்டி, 3ஜீ பூச்சி விரட்டி) எடுத்து கூறினார்.

மேலும் சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் , அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல் பற்றியும், இயற்கையான முறையில் பயிர்களுக்கு எவ்வாறு உரமிடுதல் பற்றியும், இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தழைச்சத்து உரம் இடுவதையும், உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள் பற்றியும் மற்றும் அனைத்து பயிர்களுக்கு நுண்ணூட்ட உரங்களை இடும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றி எடுத்து கூறினார்.

தோட்டக்கலை உதவி அலுவலர் ஹரிணி அவர்கள் தோட்டக்கலை துறையில் உள்ள திட்டங்களான தேசிய தோட்டக்கலை இயக்கம் , நுண்ணீர் பாசனம் திட்டம் (RKVY-PDMC )> , ஊட்டச்சத்து மேலாண்மை இயக்கம் , ஆகிய திட்டங்கள் பற்றியும் மற்றும் தொழில்நுட்ங்கள் பற்றியும் எடுத்து கூறியார்.

மேலும் பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் திருமதி. ஜோதி அசோஸ்பைரில்லம் (நெல்), அசோஸ்பைரில்லம் (இதர பயிர்கள்), பாஸ்போ பாக்டிரியா, அசோபாஸ், ரைசோபியம், சூடோமோனாஸ் உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் பயன்படுத்தும் முறை பற்றியும் செயல்விளக்கங்கள் மூலம் செய்து காண்பித்தார். அட்மா திட்டத்தில் செயல்படுத்தி வரும் விவசாயிகளுக்கான உள் மற்றும் வெளி மாவட்ட வெளி மாநில அளவிலான பயிற்சிகள், கண்டுணர்வு சுற்றுலா மற்றும் செயல்விளக்கங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். இந்த பயிற்சியினை திருமதி .வினிதா ஏற்பாடு செய்திருந்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161